www.freetnbooks.com

# Kanchipuram DT

## அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

நேரம்: 3.00 மணி | வரலாறு | மதிப்பெண்கள்:90

### பகுதி - I

குறிப்பு:1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

2) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக:– 20x1=20

1. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்

அ) சுரேந்திரநாத் பானர்ஜி ஆ) பத்ருதீன் தியாப்ஜி

இ) A.O. ஹியூம் ஈ) W.C. பானர்ஜி

2. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியர்

அ) புலின் பிகாரி தாஸ்

ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ

இ) ஜதிந்திரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்

ஈ) குதிராம் போஸ் மற்றும் பிரபுஃல்லா சாக்கி

3. 1916 ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்

அ) முஸ்லீம் லீக் எழுச்சி

ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தற்காலிக இணைப்பு

இ) முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.

ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு

4. கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது.

அ) லாலா லஜபதிராய் ஆ) ஏ.சி. மஜீம்தார்

இ) லாலா ஹர்தயாள் ஈ) சங்கர்லால் பாங்கர்

5. காந்தியடிகளின் அரசியல் குரு யார் ?

அ) திலகர் ஆ) கோகலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே

6. காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு

அ) ஏப்ரல் 6, 1930 ஆ) மார்ச் 6, 1930 இ) ஏப்ரல் 4, 1939 ஈ) மார்ச் 4, 1930

7. கீழ்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார் ?

அ) புலின்தாஸ் ஆ) சச்சின் சன்யால் இ) ஜதீந்திரநாத் தாஸ் ஈ) பிரிந்தி வதேதார்

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



8. கூற்று : பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்பு வாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்.

காரணம் : மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.

அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

ஆ) கூற்று சரி, காரணம் தவறு

இ) கூற்று மற்றும் காரணம் தவறு

ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது

9. கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது ?

அ) வேவல் பிரபு ஆ) லின்லித்கோ பிரபு

இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) இவர்களில் யாருமில்லை

10. பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர் ?

அ) ஆகஸ்ட் 15, 1947 ஆ) ஜனவரி 26, 1950

இ) ஜூன், 1948 ஈ) டிசம்பர், 1949

11. மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள்

அ) ஜனவரி 30, 1948 ஆ) ஆகஸ்ட் 15, 1947

இ) ஜனவரி 30, 1949 ஈ) அக்டோபர் 2, 1948

12. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்

அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

13. இந்திய அரசியலமைப்பில் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது ?

அ) 1951 ஆ) 1952 இ) 1976 ஈ) 1978

14. எந்த ஆண்டு இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் கடும் நெருக்கடியைச் சந்தித்தன ?

அ) 1961 ஆ) 1991 இ) 2008 ஈ) 2005

15. கீழ்க்கண்டவற்றில் எது சுதந்திரமான வர்த்தக நகரம் இல்லை ?

அ) நூரெம்பெர்க் ஆ) ஆன்ட்வெர்ப் இ) ஜெனோவா ஈ) செயின்ட் பீட்டர்ஸ்பர்க்

16. _______ நகரம் ஜாட்டன்பொலிஸ் எனும் புனைப் பெயரைப் பெற்றது.

அ) மான்செஸ்டர் ஆ) லங்காசயர் இ) லிவர்பூல் ஈ) கிளாஸ்கோ

17. இரண்டாம் பன்னாட்டு அமைப்பு _______ நகரில் துவக்கப்பட்டது.

அ) பாரிஸ் ஆ) பெர்லின் இ) லண்டன் ஈ) ரோம்

18. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிக்கையின் பெயர் யாது ?

அ) அவந்தி ஆ) ப்ராவ்தா இ) மார்க்சிஸ்ட் ஈ) மெய்ன் காம்ப்

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



19. கெல்லாக் – பிரையாண்ட் ஒப்பந்தம் ______ ஆண்டில் கையெழுத்தானது.

அ) 1927 ஆ) 1928 இ) 1929 ஈ) 1930

20. 'மூன்றாம் உலகம்' எனும் பதத்தை உருவாக்கியவர் ______ ஆவார்?

அ) ஆல்பிரட் சாவே ஆ) மார்ஷல் இ) மோலோடோவ் ஈ) ஹாரி ட்ருமன்

## பகுதி - II

குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 30 –க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 7x2=14

21. அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
22. தீவிர தேசிய வாதம் 1908க்குப் பின்னர் ஏன் குறைந்தது?
23. கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
24. பி.ஆர். அம்பேத்கரால் வழி நடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?
25. சிம்லா மாநாட்டின் பேச்சு வார்த்தைகள் ஏன் முறிந்தன?
26. அரசியலமைப்பின் ஷரத்து 370–ன் முக்கியத்துவம் என்ன?
27. பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
28. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
29. திகிலிசம் என்றால் என்ன?
30. ஷீமன் திட்டம் என்றால் என்ன?

## பகுதி – III

குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.
வினா எண் 40 –க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 7x3=21

31. இந்திய நிர்வாகச் செலவின விவரங்களைக் கூறுக.
32. அலிப்பூர் குண்டு வெடிப்பு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக?
33. மாகாணங்களில் இரட்டையாட்சி முறை பற்றி எழுதுக?
34. 1909–ஆம் ஆண்டின் மிண்டோ–மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக?
35. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
36. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
37. பீட்டர்லூ படுகொலையின் பின்னணி யாது?
38. பிரான்ஸ் தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் – தெளிவுபடுத்துக.
39. பன்னாட்டு சங்கம் வெற்றிகரமாக முடித்து வைத்த சிக்கல்கள் பற்றி குறிப்பு வரைக?
40. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக?

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



## பகுதி – IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. அ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

*(அல்லது)*

ஆ) ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்டமறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது ?

42. அ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரை தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது ?

*(அல்லது)*

ஆ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க ?

43. அ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக ?

*(அல்லது)*

ஆ) 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக ?

44. அ) சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக ?

*(அல்லது)*

ஆ) பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை ? ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார் ?

45. அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகளை குறித்து விவாதிக்கவும்.

*(அல்லது)*

ஆ) இத்தாலி இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது ?

46. அ) முதல் உலகப் போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக ?

*(அல்லது)*

ஆ) *கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளின் இடங்களை குறிக்கவும்.*

1) பிரிட்டன் 2) பிரான்ஸ் 3) ரஷ்யா 4) ஜெர்மனி 5) இத்தாலி

47. அ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும் ?

*(அல்லது)*

ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் 1930 முதல் 1950 வரை நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினைக் காலக்கோட்டில் வரைந்து காட்டுக.

***/***

www.freetnbooks.com | FREETNBOOKS